தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangai Amman Kovil Street, Karapakkam, Chennai – 600 097
Phone: 044 - 28389038 E-mail: eligibility@tnteu.ac.in Website: www.tnteu.ac.in

**Date: 24.06.2022**

**No. TNTEU/R/Elig./Circular/2022/** 333

**Dr.M.Soundararajan,**Ph.D.,
Registrar i/c

பெறுதல்:

முதல்வர்கள்,
அனைத்து இணைவுபெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா / அம்மையீர்,

பொருள்: TNTEU - இணைவுப்பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - 2022 - 2023 ஆம் கல்வியாண்டு – B.Ed. III Semester வகுப்புக்கள் தொடங்குவது – குறித்து.

*****

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப்பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகளில், B.Ed. பட்டவகுப்பிற்கு, NCTE விதிப்படி, ஒரு பருவத்திற்கு 100 வேலை நாட்கள் வகுப்புக்கள் நடத்தப்படவேண்டும். அதன் அடிப்படையில் B.Ed. II Semester – க்கான கடைசி வேலை நாள் வருகின்ற 29.06.2022 அன்று உடன் முடிவடைகிறது. எனவே, 2022–2023 ஆம் கல்வியாண்டில் B.Ed. III Semester –க்கான வகுப்புக்களை வருகின்ற 04.07.2022 முதல் தொடங்கி நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இரண்டாம் பருவத்திற்க்கான பல்கலைக்கழக தேர்வுகள் வருகின்ற ஜீலை மாதம் மூன்றாவது வாரத்தில் தொடங்கி நடைபெறும் எனவும், தேர்வு முடிந்த மறுநாள் முதல் B.Ed. III Semester –க்கான பல்கலைக்கழக பாடத்திட்டத்தின் படி, மாணாக்கர்களை பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு அனுப்புவது குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் ஜீலை முதல் வாரத்தில் பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்படும் எனவும், பல்கலைக்கழகத் தேர்வு தொடங்குவதற்கு முன்னால், B.Ed. III Semester பாடத்திட்டத்தின் படி, கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு உரிய முன் பயிற்சிகளை (Preparatory Training) மாணாக்கர்களுக்கு அளித்து தேர்வு முடிந்த மறுநாள் முதல் கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு ஆயத்தப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் B.Ed./M.Ed./B.Sc.B.Ed./B.A.B.Ed. பட்ட வகுப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கான பல்கலைக்கழக தேர்வுகள் குறித்த அறிவிப்பு பல்கலைக்கழக இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது. மேலும் கல்லூரிகளில் வகுப்புகள் நடத்துவது குறித்து தமிழக அரசின் உயர்கல்வித்துறையால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

for 24/6/22
பதிவாளர் (பொ)

**Copy to:**

1. Controller of Examinations
2. Deputy Registrars/Assistant Registrars
3. P.A. to Vice – Chancellor
4. Registrar Office